# UG TRB

# தமிழ்

## அலகு 6 – வகுப்பு 1

Professor Academy

Professor Academy

# அலகு - 6

## சிற்றிலக்கியங்கள்

பரணி, பிள்ளைத்தமிழ், உலா, தூது,

கலம்பகம், பள்ளு, குறவஞ்சி, அந்தாதி

நூல்கள் : சிற்றிலக்கியச்செல்வம் - ந.வீ.செயராமன்

சிற்றிலக்கிய வகைகள் - மு.சண்முகம் பிள்ளை

Professor Academy

# சிற்றிலக்கியங்கள் என்பது

- அளவில் சுருங்கியதாக அமைவது.
- அகப்பொருள், புறப்பொருளில் ஏதேனும் ஒரு துறையைப் பற்றியதாக அமைவது.
- பாடப்பெறும் கடவுள், மன்னன், வள்ளல் ஆகியோருடைய வாழ்வின் ஒரு சிறு கூறு மட்டுமே விளக்கப்பட்டிருக்கும்.
- அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு உறுதிப் பொருள்களுள் சிலவற்றைக் கூறுவதாக அமையும்
- தூது, உலா, பிள்ளைத்தமிழ், கலம்பகம், கோவை, குறவஞ்சி போன்ற பலவகை இலக்கியங்கள் சிற்றிலக்கியம் என்ற வகைமையுள் அடங்கும்.

Professor Academy

- சிற்றிலக்கியங்கள் முதலில் பிரபந்தங்கள் என்றே வழங்கப்பட்டன.
- பிரபந்தம் என்ற வடசொல்லின் பொருள் - நன்கு கட்டப்பட்ட நூல்
- சிற்றிலக்கியங்கள் 96 என்று கூறுமிடங்கள்:
  - ‘பிள்ளைக் கவிமுதல் புராணம் ஈறாகத்
    தொண்ணுற்றாறு என்னும் தொகையதாம்’ (பிரபந்த மரபியல்)
  - ‘பதினாறை யாறிற் பெருக்கி பிரபந்தாதி
    பலவகை எடுத்துரைக்கின்....’ (பிரபந்த தீபிகை)
  - ‘தொண்ணூற்றாறு கோலப் பிரபந்தங்கள்
    கொண்ட பிரான்’ (சிவந்தெழுந்த பல்லவராயன் உலா - படிக்காசுப்புலவர்)
  - சதுரகராதி (வீரமாமுனிவர்)

Professor Academy

# சிற்றிலக்கியங்களுக்கு இலக்கணம் கூறுபவை பாட்டியல் நூல்கள்

தொல்காப்பியம்

எழுத்து
சொல்
பொருள்

பொருள்
- யாப்பு, அணி

யாப்பிலக்கணம்

பாட்டியல்
இலக்கணம்

Professor Academy

# பாட்டியல் நூல்கள்

## பன்னிரு பாட்டியல்

- ஆசிரியர் பெயரும் காலமும் தெளிவாக தெரியவில்லை
- இந்நூலாசிரியர் கி.பி.12 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர் என்பர்.
- 61 பிரபந்தங்களின் இலக்கணத்தைக் கூறுகிறது.
- மூன்று இயல்கள் , 232 சூத்திரங்கள்

1. எழுத்தியல் 2. சொல்லியல் 3. இனவியல்

Professor Academy

# வெண்பாப்பாட்டியல்

- ஆசிரியர் - குணவீர பண்டிதர் ➡

> கொள்கையின் வழாஅக் குணவீர பண்டிதர்
> குற்றமில் வாய்மைக் குணவீர பண்டிதர்
> நண்பாரும் கோடாத கீர்த்திக் குணவீர பண்டிதர்
> நேமிநாதர் (நேமிநாதம் நூலின் ஆசிரியர்)
> பேராசிரியர்

- ஊர் - களந்தை
- சமணர்
- இந்நூலானது வச்சணந்தி மாலை என்றும் அழைக்கப்படும்.
- இந்திரகாளியத்தைப் பின்பற்றி எழுதப்பட்டது (இந்திரகாளிய நெறி)
- இரண்டாம் குலோத்துங்க சோழனின் காலத்தைச் சார்ந்தவர் என்பர்
- காலம் : 12 ஆம் நூற்றாண்டு
- இந்நூலானது மூன்று இயல்கள் , 100 வெண்பாக்களைக் கொண்டது.

  (முதன் மொழியியல் - செய்யுளியல் - பொதுவியல்)

- 55 பிரபந்தங்களின் இலக்கணத்தைக் கூறுகிறது.

Professor Academy

## நவநீதப்பாட்டியல்

- ஆசிரியர் - நவநீத நாடனார்
- காலம் - கி.பி. 14 ஆம் நூற்றாண்டு
- அகத்திய மரபை சார்ந்தது. (அகத்திய நெறி)
- மூன்று இயல்கள் , கட்டளைக் கலித்துறையால் ஆன நூல்

  1. பொருத்தவியல் 2. செய்யுள் மொழியியல் 3. பொது மொழியியல்
- 44 பிரபந்தங்களின் இலக்கணத்தைக் கூறுகிறது.

Professor Academy

## சிதம்பரப்பாட்டியல்

- ஆசிரியர் - பரஞ்சோதி முனிவர்
- காலம் - 16 ஆம் நூற்றாண்டு
- அகத்திய மரபினைச் சார்ந்தது.
- ஐந்து இயல்கள் , 47 எண்சீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தம்

  (உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல், பொருத்தவியல், மரபியல்)
- சிதம்பரப்பாட்டியல் விருத்தப்பாட்டியல் என்றும் அழைக்கப்படும்.
- 63 பிரபந்தங்களின் இலக்கணத்தைக் கூறுகிறது.

Professor Academy

## இலக்கண விளக்கப்பாட்டியல்

- காலம் : 17 ஆம் நூற்றாண்டு
- இலக்கண விளக்க நூலின் ஆசிரியர் - வைத்தியநாத தேசிகர்
- இந்நூலானது குட்டித்தொல்காப்பியம் என்றும் அழைக்கப்படும்.
- இந்நூலில் பாட்டியல் பகுதியைப் படைத்தவர் தியாகராச தேசிகர் என்பர்
- 63 சிற்றிலக்கியங்களுக்கு இலக்கணம் கூறப்பட்டுள்ளது.

## பிரபந்த மரபியல்

- காலம் - கி.பி.18 ஆம் நூற்றாண்டு
- ஆசிரியர் பெயர் தெரியவில்லை
- 96 வகை பிரபந்தங்களைக் குறித்து கூறுவது
- இந்நூலின் கையெழுத்துப்பிரதி சென்னை அரசியலார் ஓலைச்சுவடி நூலகத்தில் உள்ளது.

Professor Academy

## பிரபந்த தீபிகை

- ஆசிரியர் - முத்து வேங்கட சுப்பையர் (பாப்புவையர்)
- காலம் - கி.பி.19 ஆம் நூற்றாண்டு
- முழுவதுமாக கிடைக்கப்பெறாத நூல்
- 75 பிரபந்தங்களின் இலக்கணத்தைக் கூறுகிறது.
- இந்நூலின் விருத்தங்கள் செந்தமிழ் இதழில் (மதுரை தமிழ்ச்சங்கம்) வெளியிடப்பட்டுள்ளது.

Professor Academy

# பாட்டியல் நூல்கள் சுட்டும் சிற்றிலக்கியங்கள்

| | | |
|---|---|---|
| பன்னிரு பாட்டியல் | - | 61 |
| வெண்பாப்பாட்டியல் | - | 55 |
| நவநீதப்பாட்டியல் | - | 44 |
| சிதம்பரப்பாட்டியல் | - | 63 |
| இலக்கண விளக்கப்பாட்டியல் | - | 63 |
| பிரபந்த மரபியல் | - | 96 |
| பிரபந்த தீபிகை | - | 75 |

Professor Academy

## வரையறுத்த பாட்டியல்

- ஆசிரியர் - சம்பந்த முனிவர்
- வேறுப்பெயர் - சம்பந்த பாட்டியல்
- பொருத்தங்களை மட்டும் வரையறுத்துக் கூறும் நூல்
- கட்டளைக் கலித்துறையால் ஆனது.

## தத்தாத்திரேயப் பாட்டியல், வாருணப் பாட்டியல்

உ.வே.சாவின் சங்கத்தமிழும் பிற்காலத்தமிழும் என்ற நூலின் வழி அறியப்படுபவை.


## இந்திர காளியம்

- ஆசிரியர் - இந்திரகாளியர்
- வெண்பாப்பாட்டியலின் பாயிர உரையால் அறியப்படும் நூல்

Professor Academy

# உலா

Professor Academy




- இறைவனின் திருவுருவோ, உலகம் போற்றும் பெருமகனோ, அரசனோ கரி,தேர்,பரி ஆகியவற்றுள் யாதானும் ஒரு ஊர்தியில் ஏறி, உடன்வருவோர் சூழ, மங்கல வாத்தியங்கள் ஒலிக்க வீதியில் பவனி வருவதாகவும்,
- அப்பொழுது பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் முதலிய எழுபருவ மகளிரும் பவனியில் வரும் தலைவனைக் கண்டு, காதல் கொண்டு வாடுவதாகவும்,
- புலவர் பெருமக்களால் கற்பனைச் செறிவுடன் பாடப்பெற்ற ஒருவகைச் சிற்றிலக்கியமே உலா.

Professor Academy

## உலாவிற்குரிய இலக்கணம்

பேதை முதலான ஏழுபருவப் பெண்களும் வீதியில் உலா வருகின்ற இறைவன் திருவுருவத்தையோ, பெருமகனையோ, மன்னனையோ கண்டு காமுற்றுத் தத்தம் பருவத்திற்கேற்பப் பலவாறு கூறுவதாக அமைந்து கலிவெண்பாவினால் பாடப்பெறுவது உலாச்சிற்றிலக்கியமாகும்.

### பன்னிரு பாட்டியல்

'பாட்டுடைத் தலைவ னுலாப்புற வியற்கையும்
ஒத்த காமத் தினையாள் வேட்கையும்
கலியொலி தழுவிய வெள்ளடி யியலால்
திரிபின்றி நடப்பது கலிவெண் பாட்டே'

Professor Academy

## வெண்பா பாட்டியல்

‘திறந்தெரிந்த பேதைமுத லெழுவர் செய்கை
மறந்தயர வந்தான் மறுகென்று – அறைந்தகலி
வெண்பா வுலாவாம்...’

## இலக்கண விளக்கப்பாட்டியல்

‘குழமகனைக் கலிவெண்பாக் கொண்டு
விழைதொல் குடிமுதல் விளங்க வுரைத்தாங்கு
இழைபுனை நல்லா ரிவர்மணி மறுகின்
மற்றவன் பவனி வரவேழ் பருவ
முற்றமா னார்தொழப் போந்த துலாவாம்’

Professor Academy

## சிதம்பரப்பாட்டியல்

‘குழமகனை அடையாளம் கலிவெண்பா வால்
கூறியவன் மறுகணையக் காதல் கூரேழ்
எழிற்பேதை பதினொன்று பெதும்பை பன்மூன்று
இயன்மங்கை பத்தொன்பான் மடந்தை பையைந்
தழகரிவை முப்ப.்.தோர் பெரிவை நாற்பா
னாம் வயது பேரிளம்பெண் முதலாயுள்ளோர்
தொழவுலாப் போந்த துலாத் தலைவன் பேர்க்குத்
தொடையெதுகை யொன்றிலின்ப மடலாய்ச் சொல்லே

Professor Academy

## பிரபந்தத் தீபிகை

‘மிக்கவிள மைப்பருவமாய்
உற்றதலை மகனைப் பிறப்பும் பரம்பரை
யுறங்குல மினானென்பதாய்
உயர்தலைமை யாம்மாதர் புடைசூழ வேபருவ
முளபெண்கள் கண்டு தொழவே
மத்தகைய மீதுபரி சிவிகைமீ தும்பவனி
வருதலை வனைத்துதித்து
மானே ரிசைக் கலியின் வெண்பாவி னாற்கூறல்
வருமுலா லாகுமன்றே’

Professor Academy

# உலா இலக்கியத்தில் பாடுபொருள்கள்

## முன் எழு நிலை

பாட்டுடைத் தலைவனின் குடிப்பெருமை, மரபு, ஆட்சி செய்யும் முறை, கொடை தன்மை, நீராடல், அணிகலன்களை அணிதல், தலைவனை நகர மக்கள் வரவேற்றல், பாட்டுடைத் தலைவன் வீதிகளில் உலா வருதல்

## பின் எழு நிலை

ஏழு பருவ நிலை மகளிரும், உலா வரும் தலைவனைக் கண்டு அவன்மீது காதல் கொண்டு மயங்குதல்.

Professor Academy

## தொல்காப்பியத்தில் உலா

‘ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப
வழக்கொடு சிவணியவகைமையான’

(புறத்திணையியல்,பாடாண் திணை)

- ஊரில் உள்ள பெண்கள் தலைவன் மீது காதல் கொண்டதாகப் பாடப்படும் பொருண்மையில் அமைவது.
- இந்நூற்பாவே உலா சிற்றிலக்கியத் தோற்றத்திற்கு அடிப்படையாக அமைந்தது.

Professor Academy

சிற்றிலக்கியங்கள் தொண்ணூற்றாறு என்று குறிப்பிடும் பாட்டியல் நூல்

1. பன்னிரு பாட்டியல
2. வெண்பா பாட்டியல்
3. வரையறுத்த பாட்டியல்
4. பிரபந்த மரபியல்

Professor Academy

சிற்றிலக்கியங்கள் தொண்ணூற்றாறு என்று குறிப்பிடும் பாட்டியல் நூல்

1. பன்னிரு பாட்டியல
2. வெண்பா பாட்டியல்
3. வரையறுத்த பாட்டியல்
4. பிரபந்த மரபியல்

Professor Academy

வெண்பா பாட்டியல் இலக்கணம் கூறும் பிரபந்தங்களின் எண்ணிக்கை

அ. 44

ஆ. 55

இ. 63

ஈ. 70

Professor Academy

வெண்பா பாட்டியல் இலக்கணம் கூறும் பிரபந்தங்களின் எண்ணிக்கை

அ. 44

ஆ. 55

இ. 63

ஈ. 70

Professor Academy

## நவநீதப்பாட்டியலின் பாவகை

1. வெண்பா
2. விருத்தப்பா
3. கட்டளைக் கலித்துறை
4. ஆசிரியப்பா

Professor Academy

## நவநீதப்பாட்டியலின் பாவகை

1. வெண்பா
2. விருத்தப்பா
3. கட்டளைக் கலித்துறை
4. ஆசிரியப்பா

Professor Academy

## உலா இலக்கியத்திற்குரிய பாவகை

1. ஆசிரியப்பா
2. விருத்தப்பா
3. கலிவெண்பா
4. தாழிசை

Professor Academy

## உலா இலக்கியத்திற்குரிய பாவகை

1. ஆசிரியப்பா
2. விருத்தப்பா
3. கலிவெண்பா
4. தாழிசை

Professor Academy

தொல்காப்பியர் எத்திணையில் உலா இலக்கியத்திற்கான வித்தினை அமைத்துள்ளார்?

1. வெட்சித்திணை
2. வாகைத்திணை
3. வஞ்சித்திணை
4. பாடாண் திணை

Professor Academy

தொல்காப்பியர் எத்திணையில் உலா இலக்கியத்திற்கான வித்தினை அமைத்துள்ளார்?

1. வெட்சித்திணை
2. வாகைத்திணை
3. வஞ்சித்திணை
4. பாடாண் திணை

Professor Academy